

30 காசு
ஆகஸ்டு
1968

www.thamizham.net - Free E Books No TM 14709

குறுநாவல் :

" குமார் ! உன்னைப்போலத் திறனுற்றலும், கொருமுறைதான் பிறப்பார்கள் என்று உனக்கு தகைய உனது அரிய திறமைகள் எவ்வளவு தவ சமுதாய நஷ்டத்தை ஏற்படுத்துகின்றன பார்த்

எழில் வளவன்

எழுதும்

# நட்பிற்காக.....

பொங்கியெழும் எண்ணங்களைப் போல பீறிட்டுக்கொண்டு வந்து கொண்டிருந்தது குற்ருல அருவி ! மெய்சிலிர்க்க வைக்கும் நீர் தூற்றல்களை அக்கம் பக்கத்தில் வாரியிறைத்து அந்த அழகிய சூழலுக்கு அழகு செய்வதுபோல மலையருவி பாய்ந்து கொண்டிருந்தது. நெஞ்சத்தில் இன்பத்தை நிறைத்து வைத்து, நினைவுகளில் எழிலாடும் கற்பனைகளைச் சுமந்த வண்ணம் நடந்து கொண்டிருந்தோம், நண்பர்கள் நால்வர்! சென்னையிலிருந்து மகிழ்வுலா கிளம்பியிருந்தோம். வளைந்து செல்லும் அந்த அழகிய தார்ச்சாலையில் நடந்துகொண்டே, எழில் கொஞ்சும் குறிஞ்சி நிலச் சூழலை ரசித்த வண்ணம், அருவி நோக்கி சென்ற எங்கள் கால்கள் திடீரென நின்றன. காரணம் எங்கிருந்தோ ஒரே கூச்சலாகக் கேட்டது. திரும்பிப் பார்த்தோம் ! அதோ அங்கே தலை விரித்த வண்ணம் ஓர் மெலிந்த உருவம் நீராடிவிட்டு வந்து கொண்டிருக்கின்றது. அந்த உருவத்தைத் தொடர்ந்து சிறுவர்கள் கூட்டம் ஏதோ கேலி செய்துகொண்டு வந்து கொண்டிருந்தது. அந்தக் கூட்டம் எங்களை நெருங்கி வர, அவர்கள் கூச்சலிட்ட சொற்கள் எங்கள் செவிகளில் விழுந்தன. "டேய் ! டேய் பைத்தியன்டா!" என்ற ஆரவாரக் கூச்சலைத் தொடர்ந்து ஒரே நையாண்டித் தனமும் வேடிக்கையும் செய்த வண்ணம் சிறுவர் கூட்டம் வந்து கொண்டிருந்தது.

நான் ஒரு கணம் தயங்கி நின்று கூட்டத்தை நோக்கினேன். மனம் குழம்பிவிட்ட ஒரு பரிதாபத்திற்குரிய நோயாளி இவர்களுக்கு ஒரு வேடிக்கைப் பொருளாகவல்லவா ஆகிவிட்டான் என்று நெஞ்சுக்குள் இரங்கினேன். ஆனால் எனது நண்பர்கள் வேடிக்கையான விளையாட்டுப் பொருளைப் பார்ப்பது போல நோக்கினர். அந்த உருவம் எங்களை நெருங்கி வந்து கொண்டிருந்தது. அதன் முகம் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது ! அந்த உருவத்தைப் பார்த்த நான் என்னையே மறந்த வண்ணம் ஒரே கூச்சலிட்டுக் காட்டுக் கத்தாய் கத்தியிருப்பேன். எப்படியோ அடக்கிக் கொண்டேன். அந்த உருவம்......அந்த தலை விரித்து பைத்தியமாக வந்து கொண்டிருக்கும் பரிதாபத்திற்குரிய மனித உயிர் இவனு என்று புலன்களெல்லாம் சில்லிட்டுக் கேட்டன! கடந்த கால வரலாற்றை நோக்கி நினைவுகள் சென்றன.

நடந்து கொண்டேயிருக்கிறோம்! திடீரென்று ஒரு தடை. நிற்கிறோம்.

www.thamizham.net - Free E Books No TM 14709

*பேச்சாற்றலும் உடையவர்கள் சில நூற்ருண்டுக் அடிக்கடி சொல்வேனே நினைவிருக்கிறதா? அத ருன வழியில் செலவழிக்கப்பட்டு, எவ்வளவு பெரிய தாயா?''*

தடைக்குரிய பொருளைப் பார்க்கின்ருேம். தடையை விலக்க முயல்கிருேம். முடியாவிட்டால் பாதை மாறி நமது பயணம் தொடருகின்றது. இது நடைபாதை! இந்தச் சிறிய நடைபாதைத் தத்துவத்தை வாழ்க்கைப் பாதையிலும்கடைபிடித்துவாழ்ந்து கொண்டிருந்த மனித உயிர் ஒன்றை எனது கல்லூரி வாழ்விலே சந்தித்தேன். அவன் பெயர் குமார்! இன்பமானது அவனது வாழ்க்கைப் பாதை! வாழ்வதற்காக அமைக்கப்பட்டது அது! அந்த இன்ப வாழ்வை தடை செய்ய நிற்கும் முட்டுக்கட்டை ஏதுவாயினும், தூர எறிந்து விட தயங்க மாட்டான் அவன். அப்படி தூர எறிய அவன் எந்த முயற்சியிலும் இறங்குவான். அப்படி தூர எறிய முடியாத நிலை ஏற்படுமாயின் பாதையை வளைத்துக் கொண்டு மீண்டும் அவனது இன்பமான பயணம் தொடரும். நான் நுழைந்த வகுப்பில்தான் அவனும் நுழைந்தான். நானும் நுழைந்த நாள் முதலாய் அவனது நடை, உடை பாவனைகளைக் கவனித்து வருகிறேன். ஏனே என்னையறியாமல் தனிப்பட்ட கவர்ச்சி அவனது செயல்களில் என்னை காண வைத்தது! எங்கள் ஆங்கில வகுப்பில் கடைசி பெஞ்சு வசதியான இடத்தில் இருந்தது. பக்கத்தில் ஜன்னல். இன்பமான தென்றல் வரும்! சாலையில் போவோரையும் வருவோரையும் பார்க்கலாம். அதுமட்டுமல்ல சற்று உயரமான இடமாகையால் காலை கீழ் பெஞ்சில் வசதியாகப்போட்டுக்கொள்ள நன்ருக இருக்கும். ஏது எப்படியாயினும் என்ன நடந்தாலும் அந்த பெஞ்சில் உட்கார தவற மாட்டான் குமார்.

ஒரு சமயம் வகுப்பிற்கு தாமதமாக வந்தான் அவன்! முதல் பெஞ்சைத் தவிர மற்ற இடங்களெல்லாம் நிரம்பி வழிந்தன. அவன் சாதாரணமாக அமரும் கடைசி பெஞ்சில் நான் உட்கார்ந்திருந்தேன். ஒரே நெருக்கம் நேரே கடைசி பெஞ்சிற்கு வந்தான். ''சுந்தர் உன்னைத் தேடிக் கொண்டு நண்பர் ஒருவர் கல்லூரி



வாசலில் நிற்கிருர். ஆசிரியரிடம் கேட்டுக் கொண்டு போ'' என்ருன். நான் விரைவாக ஆசிரியரிடம் கேட்டுக்கொண்டு கல்லூரி வாசல் வரை போய் தேடிப் பார்த்

www.thamizham.net - Free E Books No TM 14709

தேன். ஒருவரும் இல்லை. கல்லூரி காவலாளியிடம்கூடக் கேட்டேன். ஒருவரும்வரவில்லை என்று ஆணித் தரமாகக் கூறினான். நேரே வகுப் பிற்கு வந்தேன். நான் உட்கார்ந் திருந்த இடத்தில் குமார் இருந் தான். வேறு வழியின்றி, எனக்கு பிடிக்காத முதல் பெஞ்சில் அமர்ந்தேன்.

எனக்கு அவனை நன்ருகப் புரிந் தது. தான் அந்த இடத்தில் உட் கார வேண்டுமென்பதற்காக எவ் வளவு தந்திரமான ஒரு முயற்சி செய்தான்! நினைத்துப் பார்க்கும் போது அவனது செய்கை எனக்கு மிகமிக்க கேவலமாகப்பட்டது. நன்ருக உட்கார வேண்டுமென்ற ஒரு சிறு இன்பத்திற்காக எவ்வளவு பெரிய சதி செய்கிருன், என்று நெஞ்சுக்குள் குமுறினேன். மிக மிக வெறுப்பிற்குரிய மனித உயிர் தன்னலமே உருவான நபர் என்று அவனை முற்றிலும் வெறுத்தேன். என்னதான் நான் வெறுத்தாலும் சில சமயங்களில் அந்த வெறுப்பை யும் மீறி அவனிடம் நான் கண்ட கவர்ச்சி அவனிடம் என்னை மீண் டும் ஒட்டவைக்கும்! அது என்ன அப்படியொரு கவர்ச்சி என்ற கேள்வி எழலாம்.

குமார் வாழ்வில் எத்தனையோ சிக்கல்கள் இருந்தன. எனக்குத் தெரியும்! அப்படி எத்தனையோ குழப்பமான சிக்கல்கள் நிறைந்து இருந்தும் மிக அலட்சியமாக அவற்றிலிருந்து விடுபடுவான்! அதற்கு அவனுக்கு துணை செய்தது அவனிடமிருந்து ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம்! அது பேச்சுக்கலை! பல் கலைக் கழகத்தில் பேச்சுக்கென்று ஒரு துறை ஒதுக்கினல், சந்தேக மின்றி குமாருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கலாம், என்று சில சமயங்களில் அவனது பேச்சுக் களால் மயங்கிய நான் நினைப்ப துண்டு.

குமார் சாதாரண வசதிகள் கூட இல்லாத ஒரு குடும்பத்திருந்து வந்தவன். ஆனல் அவன் மிக வசதி படைத்த மாணவர்களைவிட அதிகமாக செலவழித்தான். பல காரணங்கள் காட்டி ஏழைப் பெற் ருேரிடமிருந்து பணம் வாங்குவ துடன், இன்னும் பல துறைகளி லிருந்து பணம் வரும்! வகுப்பு போரடிக்கிறது என்று நினைப்பான்! உடனே தான் நினைத்த படத்திற்கு போக கிளம்பி விடுவான். படம் தொடங்குவதற்கு சில நிமிடங்கள் தான் இருக்கும். படத்திற்கு எப் படியும் போயாக வேண்டும் என் பது மாற்ற முடியாத அவனது விருப்பமாகிவிட்ட பிறகு அந்த இன்ப நிலையை மாற்ற யாராலும் முடியாது. விடுதி மாணவன் ஒரு வன் எதிர்த்தாற் போல வருவான். "டேய் மிக அவசரமாக ஒரு பொருள் வாங்கவேண்டும். பத்து ரூபாய் கொடு" என்பான். அவன் பேச்சிலே ஒரு கவர்ச்சியான கட்டளையிருக்கும். மறுக்க முடி யாத ஒரு வேண்டுகோளாகவும் தோன்றும். யாராயிருந்தாலும் அவன் பேச்சின்முன் விழுந்து விடுவார்கள்.

பிறகு என்ன. இரண்டே நிமி டங்களில் டாக்சி தியேட்டருக்குச் செல்லும். கடைசி டிக்கெட் மட் டும் இருக்கும். வாங்கிக்கொண்டு அலட்சியமாக உள்ளே நுழை வான். அவனுக்கு எப்படி அந்த பத்து ரூபாயைத் திருப்பிக் கொடுப் பது என்ற கவலைகள் எல்லாம் எழவே எழாது! அவனுக்கு வேண்டியது இன்ப வாழ்க்கை! அது கிடைக்க வேண்டும்! கிடைக்க நடுவில் இருக்கும் எது தகர்க்கப்பட்டாலும் கவலையில்லை.

கவர்ச்சி என்ற அம்சம் அவனது செயல்களில் பேச்சுக்களில் மட்டு மின்றி செய்கைகளிலும் தோன்றுவ துண்டு. அந்த விடுதி மாணவன்

www.thamizham.net - Free E Books No TM 14709

தேர்வில் ஒரு சமயம் விடை தெரியாது தவித்துக் கொண்டிருந்தான். குமார் அந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் ஒரு ஒட்டுக் காகிதத்தில் வைத்திருந்தான். தவித்துக் கொண்டிருந்த அந்த மாணவனுக்கு அந்த ஒட்டுக் காகிதத்தைக் கொடுத்து அவனை கரைகாண வைத்துவிட்டான். அந்த ஆண்டு குமாரால் அந்த மாணவன் தேறிவிட்டான். அதற்கு கைமாறு - அந்த மாணவன் அந்தப் பத்து ரூபாயை கேட்காதது மட்டுமின்றி, அடுத்த ஆண்டில் குமார் கேட்கும் போதெல்லாம் பண வசதி அளித்து வந்தான்.

இப்படி எத்தனை எத்தனையோ வலையில் விழுந்த நண்பர்கள் அவனுக்கு! இவற்றையெல்லாம் நானும் கடந்தசில மாதங்களாக கவனித்து வந்தேன். அவன் ஒரு பெரிய தன்னலக்காரன், பிறரை எவ்வளவு பயன்படுத்திக்கொண்டு தான் இன்ப வாழ்வில் முன்னேற முடியுமோ, அவ்வளவு முன்னேற ஆற்றல் படைத்தவன். இதை நோக்கும்போது அவன் ஒரு கேவலமான மனிதன் என்று தான் சாதாரணமாக எண்ணத் தோன்றும். ஆனால் ஏனோ தெரியவில்லை, எனக்கு அவனை அப்படி நினைக்கத் தோன்றவில்லை. அவனை சில சமயங்களில் நான் வெறுத்தாலும், பல சமயங்களில் அவனது அபார திறமைகள் அவன்மேல் ஒரு அளவு கடந்த கவர்ச்சியை என்னில் ஏற்படுத்தி விட்டன. அவனுடன் மிக நெருங்கிப் பழக வேண்டும் என்று ஒரு பைத்தியக்காரத் தனமான ஆசை எனக்கு அதன் விளைவாக ஏற்பட்டது.

அவனை இரு முறை நானே அவன் விரும்பிப் பார்க்க முயன்ற படம் ஒன்றிற்கு அழைத்தேன். அவனுக்கு விருப்பமான உணவுச் சாலைக்கு சில முறை அழைத்துச் சென்றேன். எனது வீட்டிற்கு வருமாறு வேண்டினேன். சிறிது சிறிதாக அவன் என்னிடம் நெருங்கிப் பழக ஆரம்பித்தான். என்னால் சில நன்மைகள் ஏற்படும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை அவனுக்கு உண்டாயிற்று. அத்தகைய ஒரு நட்பு எங்களிடம் தோன்றிவிட்ட பிறகு, நான் சிந்திப்பேன்: இவன் ஏதோ எதிர்ப்பார்த்துத்தான் என்னிடம் பழகுகிறான். மிக கேவலமான சில குணங்கள் கொண்டவன் இவன். இவனிடம் போய் என்ன நட்பு வேண்டிக்கிடக்கிறது. அவனது நட்பை இத்துடன் நிறுத்தி விடுவோம் என்று முடிவு கட்டுவேன். அதற்குரிய சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து நிற்பேன்.

ஒரு நாள் கல்லூரிச் சோதனைச் சாலையில் பொருளியல் சோதனைகள் நிகழ்த்தும் போது நானும் அவனும் ஒன்றாகச் சேர்ந்து செய்ய வேண்டி நேரிட்டது. அப்போது கோளாறு காரணமாக தராசுகள் சரிவர வேலை செய்ய மறுத்தன. எனவே தராசு முள் பகுதியை சரி செய்யும்படி குமார் என்னை வேண்டினான். நான் சரி செய்து கொண்டிருக்கும்போது திடீரென்று அவன் நடுவில் கையை விட்டு ஏதேதோ முடுக்கினான். ஒரு எதிர்பாராத தவறு நேர்ந்து விட்டது. விளைவு அறுபது ரூபாய் அபராதம். அபராதம் செலுத்தும்படி எங்கள் இருவருக்கும் தெரிவிக்கப்பட்டபோது அவன், "சுந்தர் என்ன செய்வது. கொஞ்சம் பொறுமையுடன் நடந்து கொண்டிருந்தால் இப்படி நடந்திருக்காது. பரவாயில்லை கொடுத்துவிடு. அடுத்தமுறை அவ்விதம் நேராமல் இருக்க முயற்சி செய்"—என்று அவனுக்கு எதுவுமே சம்மந்தம் இல்லாதது போல ஒதுங்கிவிட்டான். எனக்கு மிக நன்றாகத் தெரியும். அவன் நடுவில் கையை வைத்ததன் விளைவுதான் இத்தனையும் என்று! அளவிட முடியாத ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

www.thamizham.net - Free E Books No TM 14709

எனக்கு! வாய் நிறைய கொடும் சொற்களால் அவனைத் திட்ட வேண்டும் என்று நெஞ்சம் துடித்தது. ஆனால் ஏனோ தெரியவில்லை அப்படி எதுவுமே நான் செய்ததாக எனக்கு நினைவில்லை. பதில் பேசாமல் வீட்டிற்குத் திரும்பினேன். எப்படியோ பாடுபட்டு அறுபது ரூபாயும் கட்டினேன். மறுபடி நான் குமாருடன் அதற்குப் பிறகு பேச முயற்சிக்கவில்லை. அவனும் எனது மனோநிலையை புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவனுக்கென்ன! என்னைப்போல ஆயிரம் நண்பர்களைப் பேச்சுத் திறமையால்தினமும் வளைபின்னிக் கொள்ள முடியும். அவன் எவ்வித உணர்க்கூடிய வெளி உணர்ச்சிகளையும் காட்டவில்லை;

அதன் பிறகு நான் சிந்தித்துப் பார்த்தேன். இவ்வளவு இவனைப் பற்றித் தெரிந்தும் ஏன் இவனிடம் நாம் நட்பை ஏற்படுத்திக் கொண்டோம். அதுவும் நானே விரும்பி, என்று என்னையே ஏளனப்படுத்தி நினைத்துப் பார்த்தேன். சில நாட்கள் தான் தின்னால் இப்படித் தொடர்ந்து அவனைப் பற்றிச் சிந்திக்க முடிந்தது. பிறகு ஒரு மாறு பட்டஎண்ணம் உதித்தது. பாவம் வறுமை காரணமாகத் தானே என் மேல் இப்படி அபாண்டம் செலுத்தினான். அதற்காகவா இப்படி அவனைப் பகைத்துக் கொள்வது என்று தோன்றியது. அடுத்த சில நாட்களுக்குப் பிறகு எந்தக் கவர்ச்சி நிறைந்த அவனது செயல்கள் என்னை அவனிடம் ஈர்த்தனவோ அந்த செயல்கள் நினைவுத் திரைகள் நிழலிட்டன. மீண்டும் அவனுடன் பேச, பழகஅவனை "என் நண்பன்" என்று சொல்லிக் கொள்ள என்னையும் அறியாத புதிய ஆவல்!

அடுத்த நாள் தபாலில் இப்படி ஒரு கடிதம் அவனுக்கு எழுதிப் போட்டேன். "குமார், உன்னை ஒரு முக்கிய விஷயமாகக் கல்லூரி நூலகத்தில் நாளை மாலை ஐந்து மணியளவில் சந்திக்க விரும்புகிறேன். மிக முக்கியம். கட்டாயம் வரவும்—சுந்தர்" என்று எழுதினேன். மறுநாள் மாலை நாலரை மணிக்கே நூலகத்திற்கு வந்தேன். நூலகத்து வாசலையே உற்று நோக்கியபடி அமர்ந்திருந்தேன். நேரம் ஓடிக்கொண்டேயிருந்தே ஒழிய அவன் வருவதாக எவ்வித அறிகுறிகளும் இல்லை. ஆறு மணி வரை இருந்துவிட்டு ஏமாற்றத்தோடு இல்லம் திரும்பினேன். இந்த ஏமாற்றத்தால் எனக்கு அவன்மேல்வெறுப்பு வளரவில்லை, மாறாக மீண்டும், இன்னும் அதிகமாக ஒரு ஆர்வம் அவனுடன் பழக ஏற்பட்டது. என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. மறுநாள் மதியம் கல்லூரி விட்டவுடன் அவன் பின்னாலே சென்று "குமார் ஒரு நிமிடம்" என்றேன். அவன் நின்றான். "எனது கடிதம் உனக்குக் கிடைக்கவில்லையா," என்றேன், கோபம் கலந்த ஏக்கத்துடன்

"கிடைத்தது ஆனால் வர முடியவில்லை. அவசரமாக ஒரு இடத்துக்குச் செல்லவேண்டியிருந்தது."

"அப்படி என்ன அவசரமான பெரிய வேலையாய் இருந்தாலும் நேற்றுவகுப்பிலேநேரே என்னிடம் சொல்லியிருக்கலாமே" என்று குமுறும் சினத்துடன் கூற வாய் வந்தது. ஆனால் கூறவில்லை. அந்த சினத்தின் விளைவு நான் எதை எதிர்நோக்கி அவனிடம் பேச நினைக்கிறேனோ அதை எனக்கு அளிக்காது என்று தோன்றியது. உணர்ச்சிகளை மிகக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

"குமார் சாப்பிட்டவுடன் கொஞ்சம் நூலகம் வர முடியுமா" என்று மிகக் குழைவாகக் கேட்டேன்.

www.thamizham.net - Free E Books No TM 14709

"பார்க்கலாம்" என்று அலட்சியமாக வந்தது பதில். அவன் தொடர்ந்தான். நான் நடந்தேன். "என்னைப் போல மீண்டும் அவனுக்கு என்னிடம் பேச விருப்பமில்லாது இருக்கும்போது, நான் மட்டும் ஏன் அவனிடம் பேச வேண்டும். நான் அவனுக்குத் தாழ்ந்தவனு". ஒரு கணம் இப்படி ஒரு மானமுள்ள எண்ணம். மீண்டும் நூலகத்திற்கு செல்வதில்லை என்று முடிவெடுத்தேன்.

சாப்பாட்டை உணவுச் சாலையில் முடித்துக்கொண்டு நடந்து வரும்போது, நூலக வாசலில் அவன் நின்று கொண்டிருக்கும் காட்சியைக் கண்டேன். எனக்காகத் தான் அவன் நிற்கிருனு? உண்மையிலே மீண்டும் என்னிடம் பழக வேண்டும் என்று என்னைப்போல் அவனுக்கும் ஆசை இருக்கிறதா?

---

(அடுத்த இதழில் முற்றும்)

---

## எடின்பரோ மாணவர்கள் வாழ்க!

பூனு நகரில் வாடியா மருத்துவமனைக்கு மிக அவசரமாக தேவைப்பட்டது ஒரு ஆம்புலன்ஸ் வண்டி. இதனை அறிந்த எடின்பரோ மாணவர்கள் எப்படியாவது இந்தத் தேவையை பூர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காக, எடின்பரோவில் ஒரு கலை நிகழ்ச்சி நடத்தி தேவையான நிதி சேர்த்தனர். பிறகு ஆம்புலன்ஸ் வண்டியாக பயன்படும் கார் ஒன்றை வாங்கி, தேவையான அத்தனை நவீன உபகரணங்களையும் பொருத்தி, ஒரு சிறந்த ஆம்புலன்ஸ் வண்டியாக மாற்றி, மாணவர்கள் பிரதிநிகளாக நால்வர் அந்த வண்டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டனர் இந்தியா நோக்கி! அவர்களிடம் சில கேள்விகள்:

"பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு எப்படிக் கொண்டு செல்வீர்கள்"

"தரை மார்க்க மாகத்தான்! நாங்கள் நால்வரும் மாறி மாறி ஓட்டிச் செல்ல உத்தேசித்திருக்கிருேம்"

"தரை மார்க்கமாக என்ருல் எத்தனை மைல்கள்"?

"மொத்தம் 18 ஆயிரம் மைல்கள். பிரான்சு, பெல்ஜியம், ஜெர்மன், ஆஸ்திரியா, யூகோஸ்லாவியா, பல்கேரியா, துருக்கி ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் வழியாக இந்தியா செல்கிருேம்"

"மிகவும் கஷ்டமான பயணம் தான்"

"இல்லையே எங்களுக்கு இதிலே முழுத்திருப்தி! பொதுநலப் பணிக்கான சேவை என்று நினைக்கும்போது இந்த கஷ்டமெல்லாம் மறந்து விடும்." இந்த சேவைச் செம்மல்களை, தமிழகத்து மாணவர்கள் பின்பற்றுவார்களா?

www.thamizham.net - Free E Books No TM 14709